**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.No.436/2019**

**PW-1**

Date :-07.08.2025

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. ரெங்கராஜ் | Caste | |
| த/பெ. | பிச்சை | Calling | பெயிண்டிக் |
| Village | திருவானைக்கோவில் | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 36 /2025 |

அரசு தரப்பில் முதல் விசாரணை-

நான் தற்போது ஸ்ரீரங்கம் திருவானைக்கோவிலில் வசித்து வந்து பெயிண்டிங்க் வேலை செய்து வருகிறேன் . ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் 10 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் . நான் சாம்பார் வாங்கி கொண்டு வரும்போது இரவு 7 மணியளவில் நாலுகால் மண்டபம் அருகே வரும்போது புண்டா மவனே என்று ஆபாசமாக திட்டினார். பிறகு என்னை அடிக்க ஓடிவந்து பிறகு கையில் வைத்திருந்த பாட்டிலால் என்னை முதுகில் தாக்கி இரத்த காயம் ஏற்படுத்தினார் . தற்போது திறந்த நீதிமன்றத்தில் முதுகில் இருந்து தழும்பை காண்பித்தார் . பிறகு நான் காயம்பட்டவுடன் ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைகாக சேர்ந்தேன். ஒரு வாரம் சிகிச்சையில் இருந்தேன் . பிறகு நான் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றனர். என்னிடம் காட்டப்படும புகார் வாக்குமூலம் நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்துபோது போலீசார் வந்து விசாரித்து நான் சொல்ல, சொல்ல போலீசார் எழுதிக்கொண்டனர். அதை படித்து காண்பித்த பிறகு நான் கையொப்பம் செய்தேன் .அந்த புகார்

AdvaRes

வாக்குமூலம் அ .சா.ஆ-1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. போலீசார் விசாரணை செய்தனர் நடந்த விவரம் கூறினேன். வழக்கு சொத்து

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை-</u>**

எதிரியும் நானும் ஒரே ஊர்க்காரர்கள். எனக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு. நாங்கள் இருவரும் தினமும் ஒன்றாக வேலைக்கு செல்வோம்ை என்றால் சரியல்ல தனிதனியாக செல்வோம் . சம்பவஇடத்தில் மின்விளக்கு இருந்தது வெளிச்சமாக இருந்தது பொதுமக்கள் நடந்துகொண்டு இருந்தன . தகராறு நடந்தபோது ஒரே ஒரு கடை இருந்தது. எதிரி என்ன பாட்டிலில் குத்தினார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது .நான் திரும்பிய போது குத்தினார். நாங்கள் இருவரும் மதுஅருந்திவிட்டு ஒருவருக்கொருவர் தகராறு செய்ததில் நான் அவரை நான் அவரை பாட்டிலால் குத்த சென்றபோது நான் கிழே விழுந்து எனக்கு முதுகில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் பாட்டிலில் குத்தவில்லை என்றால் சரியல்ல . எனக்கு அழுக்கு என்று மற்றொரு பெயர் உள்ளது அவ்வாறு குறிப்பிட்டதால் தகராறு என்றால் சரியல்ல . நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றாலும் எதிரிக்கும் சம்பவத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல . போலீசார் சம்பவம் நடந்த மறுநாள் விசாரணை செய்தனர். போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-xxxx
Taken down by me in open court , read over
to his and accepted by him as correct and
made his signature

Sd/-xxxx
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.

Apdo